இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் ~ பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி VI, பதிப்பு 17 - ஏப்ரல் - ஜீன் 2019
Formally UGC Approved Journal (64089), © Author

# மூவர் தமிழில் முருகன்

**முனைவர் த. கலாஸ்ரீதர்**
உதவிப்பேராசிரியர், ஓலைச்சுவடித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***முன்னுரை***

*தேவார ஆசிரியர்கள் மூவரும் சிவபிரானையன்றி வேறு தெய்வத்தைத் தொழாத திருவருள் உறைப்பு உடையவர்கள். அவர்கள் திருவாக்குகள் முழுவதும் சிவபிரான் திருவராட்டி புகழ்ச்சியாகவே அமைந்துள்ளன. முழுமுதற் கடவுளாகக் கொண்டு பிறவாயாக்கைப் பெருமானாகிய சிவபிரான் திருவடிகளுக்கே தம் மனம், மொழி, மெய்களைக் கொண்டு செலுத்திய வீரர்கள் அவர்கள். கற்புடைப் பெண்டிர் தம் கணவன்மாரையன்றி வேறு நினையாத ஒருமை உடையவராதல் போன்று இக்குறவர்கள் திகழ்ந்தனர் என்று கூறுவது பொருந்தும். அம்மை விநாயகர் முருகன் முதலிய கடவுளர் பற்றிய குறிப்புகளும் அவர்கள் அருளிய தேவாரங்களிற் காணப்படும், ஆயினும் அவை நேர்வகையான் அன்றிச், சார்த்து வகையான அமைந்தன வாதல் அக்குறிப்புகளை கூர்ந்து நோக்குங்காற் புலப்படும். அவையும் சிவபிரானின் புகழ்ச்சியாகவே தெளியப்படும்.*

**மூவர் குறிப்பு சார்த்துவகைப் புகழ்ச்சி**

தேவார ஆசிரியர்கள் மூவரும் சிவபிரானையன்றி வேறு தெய்வத்தைத் தொழாத திருவருள் உறைப்பு உடையவர்கள். அவர்கள் திருவாக்குகள் முழுவதும் சிவபிரான் திருவராட்டி புகழ்ச்சியாகவே அமைந்துள்ளன. முழுமுதற் கடவுளாகக் கொண்டு பிறவாயாக்கைப் பெருமானாகிய சிவபிரான் திருவடிகளுக்கே தம் மனம், மொழி, மெய்களைக் கொண்டு செலுத்திய வீரர்கள் அவர்கள். கற்புடைப் பெண்டிர் தம் கணவன்மாரையன்றி வேறு நினையாத ஒருமை உடையவராதல் போன்று இக்குறவர்கள் திகழ்ந்தனர் என்று கூறுவது பொருந்தும். அம்மை விநாயகர் முருகன் முதலிய கடவுளர் பற்றிய குறிப்புகளும் அவர்கள் அருளிய தேவாரங்களிற் காணப்படும், ஆயினும் அவை நேர்வகையான் அன்றிச், சார்த்து வகையான அமைந்தன வாதல் அக்குறிப்புகளை கூர்ந்து நோக்குங்காற் புலப்படும். அவையும் சிவபிரானின் புகழ்ச்சியாகவே தெளியப்படும்.

***கைவேழ முகத்தவனைப் படைத்தார் (6.53.4)***

***தண்கடமா முகத்தினார்க்குத் தாதை (6-63-9)***

***ஆனைமுகற்கு அப்பன் தன்னை (6.74.7)***

ஆகிய எடுத்துக்காட்டுகள் அப்பர் அருந்தமிழில் காணக்கிடைப்பன. விநாயகருக்குத் தந்தை என்று சிவபிரானைப் போற்றுவனவாக இவை உள்ளன. மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன் என்ற இடமோ விநாயகரையே கண்டு களிப்புற்றுக் கவியிசைத்த பகுதி. இவ்வாறு வரும்

பகுதிகள் மிகமிகச் சிலவே எந்தவடிவத் தோடு அடியவர் ஆழ்ந்து சிந்தித்தாலும் அந்த ஆழ்நிலைத்தியானத்தால் நினைந்த வடிவுடன் தோன்றுபவர் சிவபிரானே என்பது அப்பர் கொள்கை.

*ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே*
*அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும் (6-18-11)*

முருகனாகவும், உமையாகவும், விநாயகராகவும் தோன்றுபவர் எல்லாம் வல்ல தனித்தலைவராகிய சிவபிரானே என்பது உணர்ந்துவரும் கருத்து என்று கூறுவது தவறாகாது.

**அப்பர் அறிவிப்பன**

முருகப் பிரானுக்கு ஆறுமுகங்கள், கடம்பர் மலர்மாலை அணிந்த குழந்தைக் கடவுள் குமரன், அப்பிரானை மகனாகக் கொண்டவர் குறவியாகிய வள்ளியை மணந்த தலைவன் குமரக்கடவுள்.

**நம்பியாரூரர் நவில்வன**

சுந்தரர் தேவாரத்து வரும் முருகப் பெருமான் பற்றிய செய்திகளும் இவற்றை ஒட்டியனவே, குறவர் மங்கையாகிய் வள்ளியம்மையின் கேள்வன் முருகன் தாரகாசுரனைப் பெருது வென்ற திருவருள் வலம்உடையவன் செவ்வேள், மலையரையன் மகளாகிய உமையம்மை பெற்ற சிறுவன் முருகன், குமரன், திருமால் பிரமன் ஆகிய தேவர்கள் சிவபிரானைத் திருவாரூர்த் திருத்தலத்தில் வணங்குவர். முருகவேளுக்குத் தாதை என்ற பெருமைக்குரியவன் சிவபரான். என்பனவே சுந்தரர் தரும் குறிப்புகள்

*குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற*
*கோனை நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்*
*நறைவிரியும் நன்னாறனை (திருநள்ளாறு-7)*
*பொரும்பல மதுடையசுரன் தாரகனைப் பொருது*
*பொன்று வித்த பொருளினை முன் படைத்த கந்த புனிதன் (கலயநல்லூர் -9)*
*மலையரையன் பொற்பாவை சிறுவனையும் தேறேன் (நாகைக் காரோணம்-9)*
*குமரன் திருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும்*
*அமரன் இருப்பது மாரூர் அவர் எம்மையுமான்வரோகேளீர் (திருவாரூர்-9)*
*பொன்னானை மயிலூர் திருமுருகவேள் தாதை (திருவதிகை-8)*

**மூவர் குறிப்புகள் ஒப்பீடு**

முருகன் குறிஞ்சிக்கடவுள் என்பதோ, பரிபாடலிற் கூறப்பெற்ற ஏனைய முருக வரலாறுகளோ விரிவாகத் தேவார மூவர் திருப்பாடல்களிற் காணப்பெறவில்லை என்பது நோக்கத்தக்கது. முருகப் பெருமான் சிவபெருமாளைத் தொழுதனன் என்பது அப்பர் சுந்தரர் திருப்பாடல்களில் மட்டும் காணப்பெறுகின்றது. சூரபதுமனைக் கொன்றமை அப்பராலும் தாரகனை வதைத்தமை சுந்தரராலும் சொல்லப்பட்டுள்ளன. மயில் ஊர்தி பற்றிச் சம்பந்தர் குறிப்பிட்டமை ஒரு வகையில் மறைபொருளாகச் சூரபதுமனை வென்றமையைச் சுட்டுகின்றது என்று கூறலாம். மூவருமே வள்ளியம்மை மணவாளனாகக் குமரக்கடவுள் விளங்குகின்றமையை குறிப்பிட்டனர். தெய்வயானை அம்மை திருமணம் குறிப்பிடப் பெறவில்லை. அன்பின் ஐந்தினை நெறியில் குறிஞ்சிக் கடவுள் வள்ளியைக் கூடி மகிழ்ந்தான். ஆதலின் தமிழ் நலம் கெழுமிய அந்நிலை மட்டும் சிறப்புறச் சுட்டியமைக்குக் காரணம் ஆகலாம். அன்றியும் தெய்வநலம் பொருந்திய மா முருகன் மண்ணுலகிற்கு எழுந்தருளி எளிய மலைக் குறவர் திருமகளை மணம் கூடியமை அப்பெருமானுடைய எளிமைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக அமைவதனால் சமயக் கொள்கைகளைத் தமிழகத்துக்குப் பரப்பமுற்பட்ட இக்குரவர்கள் இதனை மட்டும் சுட்டி மகிழ்ந்திருத்தலும் கூடும். சைவசமயக் கொள்கைகளில் மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளத் தக்க பல்வேறு நிலைகளில் இதுவும் ஒன்று என்பது கருதத்தக்கது. கருந்துறவைச் சமணர்கள் மெற்கொண்ட காலம் சற்காலத்துக்குப்பிற்பட்ட இசசமயக் குரவர் காலம் என்பது வரலாற்றிஞர் கண்ட முடிவு.

ஆண் பெண்ணுடன் கூடி மகிழும் இல்லற வாழ்வும்

இறைவனுக்கு உகந்ததே என்பதே இக்குரவர்கள் அருட்செய்திகளில் தலைமை சான்றது ஆதலின் அதற்கேற்பச் செவ்வேள் காதலித்துக் குறப்பெண் ஒருத்தியைக் கடிமணம் புரிந்த மணவாளன் என்ற குறிப்பை எடுத்துக்காட்டிக் கொள்கை விளக்கம் காட்டினர் என்று கொள்ளுதலும் கூடும்.

இனி செவ்வேள் சிவபிரானை வழிபட்டமையை இவ்வருளாளர்கள் இயம்பியமைக்குற்ற அடிப்படையாதென்று சிந்தித்தால் ஓர் உண்மை புலனாகின்றது. சிவபிரான் தலைமைக் கடவுள் என்பது மகாதேவன் மயிலை ஊர்தியாக உடையவன் முருகவேள், போரில் சூரபதுமனைக் கொன்றவன் செவ்வேள், சரவணம் என்னும் நாணற்காட்டில் சரவணம் என்ற திருப்பெயரைக் கொண்டவன் குமரன். திருக்கையில் வேலாயுதத்தை உடையவன் ஆகிய குமரன் பன்னிரெண்டு கண்ணுடைய பிள்ளைக்கடவுள் கோழிக் கொடியை உடையவன் இவ்வாறு அப்பர் தேவாரத்துள் காணப்பெறும் தொடர்களைக் கூர்ந்து நோக்கிற் புலப்படும் கருத்துக்கள் பல வள்ளிமணாளன் வேலன் ஆறுமுகன் கடம்பன் குமரன், கோழிக் கொடியோன், சரவணத்தான், மயிலூர் திருமுருகவேள் என்ற திருப்பெயர்களால் அடிகளார் செவ்வேளைக் குறிக்கின்றனர்.

***ஆறுகொலாம் அவர் தம்மகனார் (முகம் 4-18-6)***
***சேந்தனை மகனாக் கொண்டார் (4-43-8)***
***குருவிதோள் மணந்த செல்வக் குமரவேள் (4-60-3)***
***முன்னையர் மயில் ஊர்தி முருகவேள் (3-16-7)***
***நங்கடம்பனைப் பெற்றவன் பங்கினன் (5-19-9)***
***சமரசூரபண்மாவைத் தடித்த வேற்குமரன் (5-64-10)***
***சரவணத்தான் கைதொழுது சாரும் அடி (6-6-1)***
***பன்னிரெண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும் (6-18-4)***
***நம் செந்தில் மேயவள்ளி மணாளற்குத் தாதை (6-23-4)***
***வேற்குமரன் தாதை (6-23-4)***
***கோழிக் கொடியோன் (6-84-2)***

அப்பர் குறிப்புகளில் தெய்வயானை மணவாளன் முருகன் என்ற குறிப்பு இல்லை. வள்ளிக்குக் கணவன் என்ற குறிப்பே காணப்படுகிறது. முருகப் பிரான் சிவபிரானைத் தொழுது போற்றியமை குறிப்பிடப்படுகின்றது. நம் கடம்பன் நம் செந்தில் மே என்ற தொடர்களில் நம் என்ற சொல் முருகப் பிரான் நம்முடைய வழிப்பாட்டுக்குரியவன் என்ற அண்மைநிலை சுட்டப்படுதல் நோக்கத்தக்கது.

**ஆளுடைப் பிள்ளையார் அறிவுத்துவன**

திருஞானசம்பந்தர் தேவாரத்தும்முருகக் கடவுள் பற்றிக் கூறப்படும் செய்திகள் இவற்றோடு ஒத்தனவே, பெருமைக்குரிய முருகனுக்குத்தாதையாவார் சிவபிரானே, குறவர் மகளாகிய வள்ளிக்கு மணவாளன் செவ்வேள் போராற்றல் உடைய வேற்படை உடையவன் தோகை தழைத்த மயில் ஏறியவன் முருகவேள் என்பன தொகுத்துக் காணத்தக்கன.

ஆறுமுக இறை, கந்தன், குமரன் குமரவேள், சாமி சேந்தன் சேய், மயிலூர்தி, முருகன் மைந்தன் என்ற திருப்பெயர்களால் பிள்ளையார் திருமுருகனைக் குறிக்கின்றனர். குறிஞ்சி நிலத்து மகளிர் குறிஞ்சிப்பாடி இப்பெருமான் திருப்புகழைக் கூறி மகிழ்வர்.

***தாதையைக் காட்டுவர்மாமுருகன் (மொழிமாற்று -8)***
***குறவனார் தம்மகன்தம் மகனார் மணவாட்டி (எதிர்கொள்பாடி-6)***
***ஊறினார் ஓறையுள் ஒன்றினார் ஒன்றிமால்***
***கூறினார் அமர்தரும் குமரவேள் தாதை (திருத்தென்குடித்திட்டை - 6)***
***மடமயில் ஊர்தி தாதை யெனநின்று தொண்டர் மனநின்றமைந்தன் (திருநாறையூர்ச்சித்தீச்சிரம்-2)***
***வள்ளிமுலைதோய் குமரன் தாதை (அரிசிற்கரைப் புத்தூர்-6)***
***தழைமயிலேறவன் தாதையோதான் (இராமன தீச்சரம்-3)***

என்ற பெயருக்கேற்பத் தலைமை சான்ற பெருங்கடவுள் என்பதும் மக்களுக்கு உணர்த்தத் தக்க

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

உண்மைகள் அன்றியும் இறைவனாகிய சிவபிரான் மக்கள் விரும்பி வழிபடும் உருவங்களில் எல்லாம் வந்து அருள்செய்யும் பேரிரக்கமும் பெருங் கருணையும் உடைய அருளாளன் என்பதனை உலகிற்கு உணர்த்தவும் இக்குரவர்கள் முருகன் தொழுத குறிப்பினைக் கையாண்டனர் என்று கருதலாம்.

*நானவித உருவாய் நமை யாள்வான் நாணுகாதார்*
*வானார்திரி புரமூன்றெரி யுண்ணச்சிலை*
*தொட்டான் (வேணுபுரம்-5)*

என்ற விடத்துத் திருஞானசம்பந்தர் முதடியிற் குறித்த பொருளை ஒப்பிட்டு ஊன்றி உணருங்கால் இவ்வுண்மை தெளிவாகும். முருகப் பெருமானாய் வருவோனும் சிவபெருமானே என்று கூறுவதும், முருகப் பெருமான் சிவபிரானைத் தொழுதான் என்று கூறுவதும் முரண்படத் தோன்றுவனவாக மேல்போக்காய்ப் பார்ப்போர்க்குத் தோன்றும் எல்லாம் அவனே என்ற கொள்கையின் மறுநிலையே இது என்பது சிந்திப்பார்க்கு விளங்கும்.

இம்முருகனையே முதற் பொருளாகக் கொண்டு வழிபடும் கௌமாரம் நாயன்மார் வாழ்ந்த காலத்திற்கு மிகப் பிற்காலத்து விரிந்திருக்கவேண்டும். நாயன்மார் குறிக்கும் அறுவகைச் சமயங்கள் கௌமாரம் முதலியவற்றின் வேறாவன என்பதும் இங்குக் கருதி உணரத் தக்க ஓர் உண்மை

*விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள்*
*தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே (திருவாரூர்-சீகாமரம்-3)*

என்றவிடத்து அப்பர் அடிகளார் திருவாரூர்த் தெருவினில் தம் காலத்துக் கண்ட வெவ்வேறு கடவுட்கொள்கை (அகச்சமயம்) யினரைச் சுட்டுவதை இவ்விடத்து ஒப்பிட்டு பார்க்கலாம்.

**அருணகிரியார் திருப்புகழ் விரிவு**

*தொல்காப்பியம் சேயோன் மேய மைவரை உலகம்*

என்று முருகன் குறிஞ்சிக்கிழவன் என்பதனை விளக்கும். ஆனால் தேவார மூவர் குறிஞ்சி நிலத்துத் தலங்களைக் கூறும்போது சிவன் என்று முருகன் பற்றிய குறிப்புக்களை அங்கு புணைந்து பாடிடவில்லை. இக்கட்டுரையில் முதலிற் குறித்தது போல் அவர்கள் உளமெலாம் சிவமயமாக இருந்தமையே இதற்குக் காரணம் அனைத்தும் சிவனே எல்லாம் சிவம் என்ன நின்றாய் போற்றி (அப்பர்) ஆதலின் இது குறிஞ்சி என்றோ இதற்கு உரிய நிலத் தெய்வம் முருகன் என்றோ அவர்கள் சிந்தனையில் நினைவுகள் தோன்ற வாய்ப்பில்லாது போயிற்று. ஆதலால் அக்குறிஞ்சித் தலங்களில் சிறப்பாக முருகன் பற்றிய குறிப்புக்களைப் பெற வாய்ப்பு இல்லை நாயன்மார் காலத்திற்குப் பின்பே ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்னே அருணகிரி நநாதர் முருகன் வீற்றிருக்கும் தலங்கள் தோறும் சென்று தனியே செவ்வேள் தாள் பரவலாயினர்.திருஞானசம்பந்தனரையே தமக்கு முன்னோடித் தலைவராக அமைத்துக் கொண்டவர் என்பது திருப்புகழால் விளங்கும். சிவபிரான் மீது பதினாராயிரம் பாடல்க்ள பாடிய சம்பந்தர் போன்று முருகப்பெருமான் மீது பதினாறாயிரம் பாடியவர் அருணகிரிநாதர் என்கிறது. வரலாறு பின்வரும் திருப்புகழ் இதனைக் குறிப்பாகக் கூறும்.

*பூமியதனிற் ப்ரபுவான புலியில் வித்தகர் போல*
*அமிர்தகவித் தொடைபாட அடிமைதனம் கருவ்வாயே*
*சமரிலேதிர்த் தகரர்மானத் தனியயில் விட்டருள்வோனே*
*நமசிவாயப் பொருளானே ரசதகிரிப் பெருமாளே*
*(திருக்கயிலைத்திருப்புகழ்)*

இதனுள் நமசிவாய என்ற திருவைந்தெழுத்துப் பொருளாக உள்ளவன் என்று முருகனைப் போற்றுவதும் காணமுடிகிறது. திருப்புகழில் வரும் திருமுறைக் கருத்துக்களும் தொடர்களும் பற்றிய தனி ஆய்வு செய்தல் ஒப்பீட்டு வகையில் அவற்றிடையே உள்ள ஒருமைப்பாட்டினை உணர்ந்திடத் துணைபுரியும். மூவர் தமிழில் காணப்படும் குறிப்புகள் இவர்தம் இசைப்பாடல்களில் விரிவு பெறலாயின என்று கருதலாம்.